# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## விண்ணப்பப் படிவம்

## சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் – 2019

1. நூலின் பெயர் :

2. பதிப்பிக்கப்பட்ட ஆண்டு :

3. நூலாசிரியர் பெயர் (புனைபெயர் உள்பட) தமிழிலும் ஆங்கிலத்திலும் :

4. முகவரி (தொலைபேசி எண்ணுடன்) :

5. பதிப்பகத்தார் மற்றும் பதிப்பகத்தின் பெயர் (தமிழிலும் ஆங்கிலத்திலும்) :

6. முகவரி (தொலைபேசி எண்ணுடன்) :

7. நூலாசிரியர் ஒப்பம் அல்லது இசைவுக் கடிதம் :

8. பதிப்பகத்தார் ஒப்பம் அல்லது இசைவுக் கடிதம் :

9. பரிசுப் போட்டியில் பங்குபெறும் தலைப்பு :

10. நூலாசிரியரின் தன் விவரக் குறிப்பு (தனித்தாளில் இணைக்கப்பட வேண்டும்) :

# உறுதிமொழி

இந்நூல் போட்டிக்குரிய ஆண்டில் வெளியிடப்பட்டது என்றும் இத்தலைப்பில் / வகைப்பாட்டில் ஏற்கனவே தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசினைப் பெற்றிருக்கவில்லை என்றும் இதற்கு மைய / மாநில அரசிடமிருந்து நிதியுதவி / பரிசு எதுவும் பெறவில்லையென்றும் பாடநூலில் இந்த நூல் இடம் பெறவில்லை என்றும் இந்த நூலானது அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பிற சொற்பொழிவுகள் ஆகியவற்றிலிருந்து தொகுத்து வெளியிடப்படவில்லை என்றும் பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் பெறுவதற்கு இந்நூல் ஆய்வேடாக அளிக்கப்படவில்லை என்றும் நாளிதழ்களில் இது தொடராக வரவில்லை என்றும் வானொலி / தொலைக்காட்சிகளில் தொடராக ஒலி / ஒளிபரப்பு ஆகவில்லையென்றும் உறுதி அளிக்கிறேன். மேலும், இப்பரிசுப் போட்டிக்குரிய விதிமுறைகள் அனைத்தையும் நன்கு அறிந்துள்ளேன் என்பதையும் அவற்றிற்கு உட்படுகிறேன் என்றும் நான் அளித்துள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் உறுதி அளிக்கிறேன்.

**நூலாசிரியர் ஒப்பம்**

**பதிப்பகத்தார் ஒப்பம்**

**இணைப்பு: நூல்படிகள் – 10**

## சிறந்த நூல் பரிசுத்திட்ட விதிமுறைகள்

1. பரிசுப் போட்டியில் பங்கு பெறுவோர் விண்ணப்பப் படிவத்தினை விடுபாடின்றி முழுமையாக நிறைவு செய்து அனுப்புதல் வேண்டும். முழுமையாக நிறைவு செய்யப்படாத விண்ணப்பம் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
2. ஒவ்வொரு நூலுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்.
3. போட்டிக்கு அனுப்பப்பெறும் நூல் ஒவ்வொன்றிலும் 10 படிகள் அனுப்புதல் வேண்டும்.
4. பின்வரும் நான்கு வகைப்பாடுகளில் போட்டிக்கு நூல்கள் பெறப்படும்.
    - ❖ கவிதை
    - ❖ சிறுகதை
    - ❖ புதினம்
    - ❖ ஆய்வு நூல்
5. பரிசுப் போட்டிக்குக் கருதப்படும் நூல்களின் முதல் பதிப்பானது போட்டிக்குரிய ஆண்டில் சனவரி முதல் நாளிலிருந்து திசம்பர் 31க்கும் (01.01.2018 –31.12.2018) அச்சிடப்பட்டு வெளியிடப் பெற்றிருக்க வேண்டும்.
6. நூலாசிரியர் / பதிப்பகத்தார் ஒப்பம் அல்லது இசைவுக் கடிதத்துடன் அனுப்பப்பெறும் விண்ணப்பங்கள் போட்டிக்குக் கருதப்பெறும்.
7. நூலாசிரியர் ஒப்பமோ, இசைவோ இன்றி வரும் நூல்கள் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பதிப்பகத்தாருக்கு மட்டுமே பரிசளிக்கப்படும். நூலாசிரியருக்குப் பரிசுகள் வழங்கப்படா. பதிப்பகத்தார் ஒப்பமோ, இசைவோ இன்றி வரும் நூல்கள் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பதிப்பகத்திற்கான பரிசுகள் வழங்கப்படமாட்டா.
8. இப்போட்டிக்காகப் பெறப்படும் நூல்கள் அரசால் அமர்த்தப் பெறும் நிலைக்குழு ஆய்ந்து பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கும்.
9. குறிப்பிட்டதொரு நூல் எந்த வகைப்பாட்டைச் சார்ந்தது என்று படிவத்தில் குறிப்பிடப்படாத நேர்வில் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
10. வாழும் ஆசிரியர்களின் நூல்களும் நூல்கள் வெளியிடப் பெற்றபோது வாழ்ந்து கொண்டிருந்த ஆசிரியர்களின் நூல்களும் மட்டுமே இத்திட்டத்தில் ஏற்றுக்

கொள்ளப்படும். நேர்வுக்கேற்ப, நூலாசிரியர்களுக்கோ, அவர்களுடைய மரபுரிமையர்களுக்கோ பரிசுகள் வழங்கப்பெறும்.

11. தொகுப்பாக அமையும் குறுநாவல்கள், சிறுகதை என்னும் தலைப்பில் அடங்கும்.
12. போட்டிக்கு வரப்பெறும் நூல்கள் முன்னுரை முதலியன உட்பட இரட்டை கிரவுன் அளவில் 150 பக்கங்களுக்குக் குறையாமலும் டெம்மி அளவில் 130 பக்கங்களுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். கவிதை வகைப்பாட்டிற்குப் பக்க வரையறை இல்லை. கவிதை உட்பட அனைத்து வகைப்பாடுகளின் கீழான நூல்களும் கிரவுன் அளவுக்குக் குறையக்கூடாது.
13. ஒவ்வொரு தலைப்பிலும் ‘சிறந்த நூல்’ ஒவ்வொன்றிற்கும் நூலாசிரியருக்குப் பரிசுத்தொகை ரூ.50,000/—மும் பதிப்பகத்தினருக்குப் பரிசுத் தொகையாக ரூ.10,000/—மும் வழங்கப்பெறும்.
14. ஒரு தலைப்பில் ஒரு நூல் மட்டுமே வரப்பெற்றால் அத்தலைப்பில் பரிசு வழங்க இயலாது.
15. ஒரு தலைப்பில் / வகைப்பாட்டில் இருமுறை பரிசு பெற்ற நூலாசிரியர் அதே வகைப்பாட்டில் / தலைப்பில் மூன்றாவது முறையாகப் பரிசு பெற இயலாது.
16. மைய / மாநில அரசின் நிதியுதவி அல்லது பரிசு பெற்ற எந்நூலும் இப்பரிசுப் போட்டிக்குக் கருதப்பட மாட்டாது.
17. பரிசு பெறும் நூல், நூலாசிரியர்களின் கூட்டு முயற்சியால் ஆக்கப்பட்டதாயின் அந்நூலின் பரிசுத் தொகை அந்நூலாசிரியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.
18. பாடநூலில் இடம்பெற்றுள்ள நூல்கள் பரிசுப் போட்டிக்குக் கருதப்படமாட்டா.
19. போட்டிக்காக வரப்பெற்ற நூல்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பியனுப்ப இயலாது.
20. பரிசுக்குரிய நூல்கள் விவரம் அரசின் ஏற்புடன் அறிவிக்கப்பெறும்.
21. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பிற சொற்பொழிவுகள், பல்கலைக்கழகப் பட்டங்களுக்கு அளிக்கப்பெற்ற ஆய்வேடுகள், நாளிதழ்களில் தொடராக வெளியிடப்பெற்றவை, வானொலி, தொலைக்காட்சியில் தொடராக இடம்பெற்றவை

(கவிதை நீங்கலாக) நூலாக ஆக்கப்பட்டிருப்பின் அவை இப்போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

22. பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயணப்படி எதுவும் வழங்கப் பெறமாட்டாது.
23. இத்திட்டம் தொடர்பான விதிகளைத் தேவைக்கேற்ப அவ்வப்போது திருத்தவோ, மாற்றவோ, நீக்கவோ அரசுக்கு அதிகாரம் உண்டு.
24. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் எழக்கூடிய இடர்ப்பாடுகள் குறித்து அரசால் மேற்கொள்ளப்படும் முடிவே இறுதியானதாகும். அம்முடிவினை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோ பிற வகையிலோ எதிர்த்தல் கூடாது.

**நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து**

**சேருவதற்குரிய கடைசி நாள் 31.03.2019**

**விண்ணப்பங்கள் வந்து சேருவதற்குரிய முகவரி**

**இயக்குநர்,**
**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**
**மருத்துவர் தங்கராசு சாலை,**
**சட்டக்கல்லூரி அருகில்,**
**மதுரை – 625020.**